டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.10.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 100 | Madurai | Online Edition

# தமிழ்நாட்டிலிருந்து பல்கேரியாவிற்கு இயற்கை முறையில் தயாரிக்கப்பட்டுள்ள பனை வெல்லத் தூள் ஏற்றுமதி!

புது தில்லி, அக்.16

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும், வேளாண் மற்றும் பதனப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்திலிருந்து பல்கேரியாவின் வார்னா நகருக்கு, 1.755 மெட்ரிக் டன் எடையுள்ள இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட பனை வெல்லத் தூளை (பனை மலர் தேனிலிருந்து தயாரிக்கப்பட்டது) முதன்முறையாக ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த ஏற்றுமதி 15.10.2026 அன்று நடைபெற்றது.

இது, இந்தியாவின் பாரம்பரிய பனை சார்ந்த தயாரிப்புகளை சர்வதேச சந்தைகளுக்குக் கொண்டு செல்வதிலும், நாட்டின் இயற்கை முறையில் தயாரிக்கப்படும் ஏற்றுமதிப் பொருட்களை அதிகரிப்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகும்.

137 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும் இந்த இயற்கை சாகுபடித் திட்டம், தமிழ்நாட்டின் பாரம்பரிய பனை சார்ந்த தயாரிப்புகளுக்கான சந்தை வாய்ப்புக்களை வலுப்படுத்த உதவுகிறது. உள்நாட்டுச் சந்தையுடன் ஒப்பிடுகையில், இந்த ஏற்றுமதி மூலம் விவசாயிகளுக்கு 15 முதல் 22 சதவீதம் வரை கூடுதல் வருவாய் கிடைப்பதுடன், உற்பத்தியாளர்களுக்கு 17% கூடுதல் வருவாயும் கிடைக்க வகை செய்கிறது.



# பண்ணைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க மானியம்

திருப்பூர், அக்.16

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், பண்ணை குறைபாடு களைதல் (Farm Deficiency Correction – FDC) திட்டத்தின் கீழ், தோட்டக்கலைப் பணிகளுக்குத் தேவையான பண்ணைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது.

மானிய விவரங்கள் : திட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள தகுதியான கருவிகளில் ஏதேனும் ஒன்றை வாங்கிக் கொள்ளலாம்.

**கருவியின் மொத்த விலை :** ரூ.4,000

**அரசு மானியம் :** ரூ,2,000 / அலகு

**விவசாயியின் பங்களிப்பு :** ரூ.2,000

**வழங்கப்படும் கருவிகளுக்கான எடுத்துக்காட்டுகள் :**

ஏணி, பிளாஸ்டிக் கிரேட், குழாய்கள், கத்தரிக்கோல் (Secateurs), மண்வெட்டி, களைக் கொத்து, அரிவாள், தெளிப்பான், தார்ப்பாலின் தாள், களை வெட்டும் கத்தி, கவாத்துக் கத்தி, மலர் கத்தரிக்கோல், எடை இயந்திரம், அலுமினிய ஏணி, பிளாஸ்டிக் பேரல்.

**நாற்றங்கால் மற்றும் இதர தோட்டக்கலைப் பயன்பாட்டுக் கருவிகள்**

**குறிப்பு :** திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள கருவிகளை மட்டுமே வாங்க வேண்டும். உரிய அசல் பில் மற்றும் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மானியம் அரசின் நடைமுறை விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

**தேவையான ஆவணங்கள் :**

ஆதார் அட்டை, குடும்ப அட்டை, சிட்டா, வங்கிக் கணக்குப் புத்தக நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மேலும் விவரங்களுக்கு உதவி தோட்டக்கலை அலுவலர்கள் : ராஜா – 99434 15256, சரவணகுமார் – 97891 97648, வீரலட்சுமி – 77084 65302 தொடர்பு கொள்ளலாம்.

அரசு மானியத்தைப் பயன்படுத்தி, நவீன தோட்டக்கலைக் கருவிகளுடன் விவசாயத்தை மேம்படுத்துவோம்!

# பொறிப்பயிர் சாகுபடி செயல்விளக்கப் பயிற்சி அளித்த வேளாண்மைக் கல்லூரி மாணவிகள்



பெரம்பலூர், அக்.16

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறுவயலூர் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள், வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, ச.தனலெட்சுமி, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு அங்கமாக, மாணவிகள் சிறுவயலூர் கிராம விவசாயிகளுக்குப் பொறிப்பயிர் / கவர்ச்சிப் பயிர் சாகுபடி முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த செயல் விளக்க பயிற்சியினை அளித்தனர்.

வேளாண்மையில் பொறிப்பயிர் (Trap Crop) என்பது முதன்மைப் பயிர்களைத் தாக்கும் குறிப்பிட்ட பூச்சிகளைக் கவர்ந்து ஈர்த்து, அவற்றின் தாக்குதலைக் குறைப்பதற்காக வளர்க்கப்படும் துணைப் பயிராகும். பூச்சிகளைக் கவரும் மாற்று இலக்காக செயல்படும் இப்பயிர்கள் முதன்மைப் பயிர்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொறிப்பயிர்களை முதன்மைப் பயிரின் வரப்பு களிலோ அல்லது பொருத்தமான இடங்களிலோ பயிரிடுவதன் மூலம் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த உதவுகின்றன. இது பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையைப் பின்பற்ற உதவும்.

இப்பயிற்சியின் மூலம் பொறிப்பயிர் / கவர்ச்சிப் பயிர்கள் குறித்து விவசாயிகள் தெளிவாக அறிந்து கொண்டதோடு, இப்பயிற்சி குறித்த சந்தேகங்களையும் மாணவிகளிடம் தெளிவாக கேட்டு அறிந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உலக மகளிர் விவசாயிகள் தின விழா!



விருதுநகர், அக்.16

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டாரம், நல்லம நாயக்கன்பட்டி கிராமத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டம் கீழ் 40 மகளிர் விவசாயிகள் கொண்டு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் முன்னோடி மகளிர் விவசாயிகளை கௌரவிக்கும் விதமாக மரக்கன்றுகள் காய்கறி விதைத் தொகுப்புகள் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கு ராஜபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் கு.தனலட்சுமி தலைமை தாங்கினார். மேலும் மகளிர் விவசாயிகளுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் விமலா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மகளிர் விவசாயிகளுக்கு சமச்சீர் உரம் இடுதல் அவசியம், மண்புழு உரம் தயாரித்து அதன் மூலம் லாபம் பெறுதல், மண்வள அட்டையில் வழங்கப்பட்ட அளவின் படி உரம் இடுதல் ஆகியவைகளை விரிவாக எடுத்துரைத்தார். இதில் தேவதானம் அரசு விதை பண்ணை வேளாண்மை அலுவலர் அன்னபூரணி கலந்து கொண்டு மகளிர் விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் பயன்படுத்தும் முறை விதை நேர்த்தி செய்து விதைப்பதால் கிடைக்கும் நன்மைகள் ஆகியவை களை விளக்கிக் கூறினார். மேலும் ராஜபாளையம் துணை வேளாண்மை அலுவலர் ராமன் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்தும் வேளாண்மை விரிவாக்க மையத்தின் இடுபொருட்கள் இருப்பு நிலைகளில் விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாராயணன், உதவி தொழில்நுட்ப மேலாளர் பத்மாவதி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் மீனாட்சி சுந்தரம் சிறப்பாக செய்திருந்தனர்.

# பெண் விவசாயிகள் தினத்தை முன்னிட்டு சாத்தூர் வட்டாரத்தில் விவசாயிகள் பயிற்சி

விருதுநகர், அக்.16

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டாரத்தில் வேளாண்மைத்துறை அட்மா திட்டம் சார்பில் பெண் விவசாயிகள் தினம் அக்டோபர் 15 அன்று கொண்டாடப்பட்டது.

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு, உணவு உற்பத்தியில் மகளிர்களின் பங்கு முக்கியமானது. இதனை கொண்டாடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15 அன்று பெண் விவசாயிகள் தினம் கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் சாத்தூர் வட்டாரத்தைச் சார்ந்த பல்வேறு கிராமப்புற பெண் விவசாயிகள் 40 பேர் கலந்துகொண்டனர்.



வேளாண்மை துணை இயக்குநர் மத்திய அரசு திட்டம் நாச்சியார்அம்மாள் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் கு.முத்தையா, இந்நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். வேளாண் பணிகளில் விதைப்பு, நாற்று நடவு செய்தல், களையெடுத்தல், பயிர் பராமரித்தல், அறுவடை செய்தல் மற்றும் வேளாண் பொருட்களை மதிப்புக் கூட்டுதல் போன்ற பணிகளில் கிராமபுற பெண்கள் செயல்பட்டு வருகின்றனர். வேளாண் பணிகளில் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் வேளாண் துறையில் பல மானியத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார்.

பட்டுவளர்ப்புத்துறை இளநிலை உதவியாளர் (வணிகம்) ஜெயலட்சுமி, பட்டுவளர்ப்புத்துறையில் செயல்படுத்தப்படும் பட்டு வளர்ப்பு பயிற்சி மல்பெரி நாற்று வளர்த்தல், பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டுவளர்ப்பு கூடாரம் அமைத்தல் மானியத்திட்டங்கள் குறித்து பேசினார். தொழில்முனைவோர் லட்சுமி, கலந்து கொண்டு PgzgO திட்டத்தின்கீழ் சிறுதொழில் செய்வோர்க்கான 35 சதவீத மானியத்தில் மரச்செக்கு எண்ணெய் இயந்திரம் வாங்கி தனது ஓய்வு நேரத்தில் தொழில்செய்து வருமானம் ஈட்டிவருவதாக தெரிவித்தார். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட வட்டார ஒருங்கிணைப்பாளர் சுகந்தி, கிராமப்புற விவசாயிகளின் வாழ்வா தாரத்தினை மேம்படுத்தும் வகையில் விவசாயிகளை ஒருங் கிணைத்து குழுக்களை அமைத்து அவர்களுக்கு பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டு வாடகை விடுதல், நஞ்சில்லா விவசாயத்தினை ஊக்குவிக்கும் வகையில் இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி வழங்கி விவசாயிகளுக்கு தேவையான இயற்கை வேளாண் இடுபொருட்களை வழங்குதல், வேளாண் மற்றும் வேளாண்சார்ந்த தொழில் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார்.

இப்கோ நிறுவனம் மூலம் நானோ யூரியா, பண்ணைக் கழிவு களை மக்கவைக்கும் திரவம் பயன்படுத்தும் முறை பற்றி செயல் விளக்கம் வழங்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் இந்து, வேளாண்மைத் துறையிலல் செயல்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் மற்றும் நானோ யூரியா, பண்ணைக் கழிவுகளை மக்கவைக்கும் திரவம் வழங்கப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா, அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தில் செயல் படுத்தப்படும் பயிற்சி மற்றும் பட்டறிவு பயணங்கள் மற்றும் செயலாக்கங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

# கால்நடை மருத்துவமனைக்கு சென்று கலந்துரையாடி வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டினம், அக்.16

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் திருத்துறைப்பூண்டியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டனர். அப்போது, கால்நடை மருத்துவர் டாக்டர் கலைச்செல்வன், கால்நடைகளில் குடற்புழு நீக்கத்தின் (Deworming) முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்தார்.

குடற்புழுக்கள் கால்நடைகளின் ஊட்டச்சத்துகளை உறிஞ்சி, உடல் எடை குறைதல், வளர்ச்சி பாதிப்பு, பால் உற்பத்தி குறைதல் மற்றும் உடல் நலக் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடும் என்று எடுத்துரைக்கப்பட்டது. மேலும், கால்நடைகளின் வயது, உடல் எடை மற்றும் உடல் நிலைக்கு ஏற்ப கால்நடை மருத்துவரின் ஆலோ சனையுடன் தகுந்த குடற்புழு நீக்க மருந்துகளை வழங்குதல், சரியான இடைவெளியில் குடற்புழு நீக்கம் மேற்கொள்ளுதல் மற்றும் கால்நடை கொட்டகைகளைத் தூய்மையாகப் பராமரித்தல் ஆகியவற்றின் அவசியம் குறித்தும் மாணவர்கள் அறிந்து கொண்டனர். இந்தக் களப்பார்வை, கால்நடைகளின் ஆரோக் கியத்தைப் பாதுகாப்பதிலும், அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலும் குடற்புழு நீக்கத்தின் பங்கைப் புரிந்து கொள்ள RAWE மாணவர்களுக்கு உதவியாக அமைந்தது.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவண்ணாமலை, அக்.16

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கி இருப்பதால் சில இடங்களில் மிதமாகவும் மற்றும் சில இடங்களில் அதிக அளவில் மழை பெய்து கொண்டு இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகள் ADT (R) 45, ADT 37, CO 51 மற்றும் மணிலா, உளுந்து போன்ற விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்த பின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்பு திறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிறஇரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியனவற்றை பரிசோதனை செய்து அதன் பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்டவிண்ணப்ப படிவத்துடன் ஒருமாதிரிக்கு ரூ.80/–வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

# பயறுவகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி



சிவகங்கை, அக்.16

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரம் சாத்தனி கிராமத்தில் பயறுவகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப் பள்ளி நடைபெற்றது. இந்த பண்ணைப் பள்ளியில் சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) செல்வம் தலைமை வகித்து கலந்து கொண்டு பயறு வகைகளில் தொழில்நுட்பங்களை உயிர் விளைச்சல் இரகங்களை எடுத்து கூறியும், விதை அளவு ஏக்கருக்கு 8 கிலோ, வரிசை நடவு, நுனிக்கிள்ளுதல், நாப்தலின் அசிடிப் ஆசிட், இலைவழி தெளிப்பு, வளர்ச்சி மற்றும் பூக்கும் தருணங்களில் மண்ணில் ஈரப்பதத்தை உறுதி செய்தல் போன்ற தொழில் நுட்பங்களை எடுத்து கூறியும், நிலக்கடலை, சோளம், கம்பு உடன் பயறுவகை பயிர்களை ஊடுபயிராக பயிரிட வேண்டும் என்று எடுத்து கூறினார்.

சாகுபடி தொழில்நுட்பங்களான மகசூலை அதிகரிக்க 2 கிலோ யூரியாவை விதைத்த 30 (ம) 45ம் நாளில் தெளிக்க வேண்டும் என்றும், பயறு ஒன்டர் ஏக்கருக்கு 2 கிலோவினை பூக்கும் தருணத்திலும் பின் 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும் என்றும், வறட்சி தாங்குவதற்கு பொட்டாசியம் குளோரைடு 20 கிராமை 1 லிட்டர் நீருடன் கலந்து இலை வழி தெளிப்பாக பயிர் வளர்ச்சி பருவத்தில் தெளிக்க வேண்டும் என்று எடுத்து கூறினார்.

மேலும் இந்த பயிற்சியில் முனைவர் ராஜேஸ் நல்லையா, வெள்ளை ஈ, அசுவினி, பூ வண்டு (அ) கொப்பள வண்டு, புள்ளிக் காய்ப் புழு மற்றும் பச்சைக் காய்ப்புழு அறிகுறிகள் தெளிவாக எடுத்துக் கூறியும் சாறு உறிஞ்சும் பூச்சிகள் (வெள்ளை ஈ, அசுவினி) கட்டுபடுத்த மஞ்சள் நிற ஒட்டும் பொறி அட்டைகள் ஏக்கருக்கு 5 எண்கள் பொருத்தல் வேண்டும். காய் புழுக்கள் மேலாண்மை தொழில்நுட்பங்களான என்.பி.வைரஸ் 400 மி.லி தெளிக்க வேண்டும், 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும் என்றும், குயினைல்பாஸ் (25 5 நுஊ) 400 மி.லி.தெளிக்க வேண்டும், மஞ்சள் தேமல், சாம்பல் நோய், ஆந்தராக்னோஸ் நோய், வேர் அழுகல், நோய் மலட்டுதேமல் நோய் அறிகுறிகள்

உண்மை மாதிரிகள் வைத்து கட்டுபடுத்தும் தொழில்நுட்பங்களை மஞ்சள் தேமல் நோய் கட்டுபடுத்த வேப்பெண்ணெய் 3 மி.லி / லிட்டர் நீருடன் தெளிக்க வேண்டும் என்றும், வேர் அழுகல் நோய் கட்டுபடுத்த டிரைக்கோடெர்மா ஆஸ்பிரில்லம் 1 கிலோவினை 20 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து விதைப்புக்குப் பின் 30 நாட்கள் கழித்து இடவும், சாம்பல் நோய் கட்டுபடுத்த வேப்பம் விதைச்சாறு 5 சதவிதம் (அ) வேப்பம் எண்ணெய் 3 சதவிதம் - 10 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும் என்றும், மலட்டு தேமல் நோய் கட்டுபடுத்த பாதிக்கப்பட்ட செடிகளை அகற்று தல் வேண்டும் போன்ற தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார தைப்பத்துல் ஆசிபா நெல் பயிர்க்கு மாற்றாக உளுந்து, எள் பயிர்களை பயிரிடுமாறு, மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் குதிரைவாலி சாம்பா, பவள செம்மணி, தூய மல்லி செங்கல்பட்டு சிறுகமணி போன்ற விதைகள் 50 சதவிதம் மானியத்தில் வழங்கப்படுகிறது.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி அட்மா திட்ட விரிவாக எடுத்து கூறியும், வேளாண் இடுபொருட்கள், நுண்ணூட்டம் இடும்முறை பற்றி பேசினார். வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும், திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் இவைகளை பயன்படுத்தி பயிர்களில் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன் பாடுகள் குறித்தும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உழவர் செயலி பயன்படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். காளையார்கோவில் வட்டார உதவிதொழில்நுட்ப மேலாளர் காளிஸ்வரி பண்ணைப்பள்ளி கலந்து கொண்டு பண்ணைப்பள்ளி ஏற்பாடுகள் செய்தார்.

## உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தைப் பார்வையிட்ட வேளாண் மாணவர்கள்!

திருவாரூர், அக்.16

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை (FPO) பார்வையிட்டனர். அப்போது, உழவர் உற்பத்தி யாளர் நிறுவனத்தின் செயல்பாடுகள், விவசாயிகளின் ஒருங் கிணைப்பு, வேளாண் விளைபொருட்களின் சந்தைப்படுத்தல், மதிப்புக்கூட்டுதல் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.



மேலும், விளைபொருட்களை நேரடியாகச் சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், வேளாண் இடுபொருட்களைப் பெறுவதற்கான வசதிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவம் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன. இக்களப்பயணத்தின் மூலம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்தில் அவற்றின் பங்களிப்பு குறித்த நடைமுறை அறிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.



# நில விபரங்களை விவசாய அடையாள எண்ணில் பதிவது அவசியம். ஏன் தெரியுமா?

தற்போது வேளாண் துறை மூலமாக விவசாயிகளுக்கு அடையாள எண் (FARMER I.D) பதிவு செய்யும் பணி அங்காங்கு நடைபெற்று வருகிறது என்பது நாம் அறிந்ததே.




**விவசாயிகள் என்ன செய்ய வேண்டும்?**

நேரடி பட்டா உள்ள அனைத்து விவசாயிகளும் தங்களுக்கு அருகேயுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் (A.D.A OFFICE) விவசாய அடையாள எண் பெறுவதற்கான செயலியில் (APP) பதிவு செய்து வருகின்றனர். ஏற்கனவே விவசாய அடையாள எண் பதிவு செய்துள்ள சில விவசாயிகள் தங்கள் நிலங்களில் ஒரு பட்டாவை மட்டுமே பதிவு செய்து அடையாள எண் பெற்றுள்ளனர். உதாரணமாக, ஒரு விவசாயிக்கு 3 பட்டாக்கள் இருப்பினும் அவர் ஒரு பட்டா வில் நிலத்தை மட்டுமே பதிவு செய்து அடையாள எண் பெற்றுள்ளார். இதில் மற்ற நில விபரங்கள் இருக்காது. அது தவறான அணுகு முறை. மீதமுள்ள தங்களின் நிலங்களின் விபரங்களை உடனடியாக வேளாண்துறை நடத்தும் சிறப்பு முகாமில் பதிவு செய்ய வேண்டும்.

**பதிவு செய்ய என்னென்ன ஆவணங்களை விவசாயிகள் கொண்டு வரவேண்டும்?**

1) விவசாயிகள், தங்களுடைய பெயரிலான அனைத்து பட்டாக்களை கொண்டு வரவேண்டும்.

2) விவசாயியின் ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இனணத்த செல்போன், எண், அறிய விவரங்களை கொண்டு செல்ல வேண்டும்.

**இதனால் என்ன பயன்?**

1) இனி வரும் காலங்களில் பயிர் கடன், இன்சூரன்ஸ், உரம் வினியோகம் ஆகியவை விவசாய அடையாள எண்ணில் பதிவு

செய்யப்பட்டுள்ள நிலங்களின் அடிப்படையில் மட்டுமே வழங்கபடவுள்ளது (பதிவு பெறாத நிலங்களுக்கு சலுகை மானியம் கோர முடியாது).

2) விவசாய அடையாள எண் பெற்றுள்ள விவசாயிகள் தான் 'நம்ம வயல்' செயலி மூலமாக தனது வயலின் சாகுபடி விவரங்களை மின்னணு பயிர் கணக்கீட்டில் (DCS) பதிவு செய்ய இயலும். இச்செயலி ஆண்ட்ராய்ட் செல்போனில் மட்டுமே செயல்படும். விவசாயிகளே தங்களுடைய பயிர் சாகுபடி கணக்கெடுப்பை எளிதாக மேற்கொள்ளலாம்.

3) தங்களுடைய கிராம மின்னணு பயிர் கணக்கெடுப்பை விரைவாக செய்து முடிக்க உதவியாக இருக்கும்.

4) விவசாயி பதிவு எண்ணில் விடுபட்ட நிலங்களை விவசாயிகளே எளிதாக கண்டறியலாம்.

எனவே அனைத்து விவசாயிகளும் தங்களின் பெயரிலுள்ள அனைத்து நில விபரங்களை விவசாய அடையாள எண்ணில் பதிவு செய்ய வேண்டும்.

என்ன விவசாயிகளே! பதிவு செய்ய கிளம்பியாச்சா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சிவகாசி வட்டாரத்தில் இயற்கை வேளாண்மை குறித்து பெண் விவசாயிகளுக்கு பயிற்சி



விருதுநகர், அக்.16

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வேளாண்மைத்துறை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் குமிழங்குளம் கிராமத்தில் இயற்கை வேளாண்மை பற்றிய விவசாயிகள் பயிற்சியானது 15.10.26 அன்று நடைபெற்றது. இது குறித்து சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இராமசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது.

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 15ம் தேதி மகளிர் விவசாயிகள் தினமாக நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது.

சர்வதேச நாடுகள் சபை சார்பில் 2026ம் ஆண்டு சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டு என அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக சிவகாசி வட்டாரம், குமிழங்குளம் கிராமத்தில் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மை / அங்கக வேளாண்மை தொடர்பாக 40 பெண் விவசாயிகளுக்கு பயிற்சியானது 15.10.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை அலுவலர் சுமதி, தலைமையேற்று வேளாண்மைத்துறை மானியத் திட்டங்கள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

விருதுநகர் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் கார்த்திகா கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மண்வளம், மண்ணில் உள்ள சத்துக்கள், பயிர்களுக்கு தேவையான அத்தியாவசிய சத்துக்கள் பற்றியும், மண்ணில் அங்கக கரிமத்தினை அதிகரிக்க கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் பற்றியும், அங்கக இடுபொருட்களான ஜீவாமிர்தம், பஞ்சகாவ்யா, மீன் அமிலம் போன்றவை தயார் செய்யும் முறைகளும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

சிவகாசி வட்டார முன்னோடி இயற்கை விவசாயி வசிதா, இயற்கை வேளாண் மையில் தான் கடைபிடிக்கும் தொழில் நுட்பங்களையும் அனுபவங்களையும் விவசாயிகளுடன் கலந்துரையாடல் மூலம் பகிர்ந்து கொண்டார். மாவட்ட தொழில் மைய ஒருங்கிணைப்பாளர் மாரீஸ்வரி, கலந்து கொண்டு அங்கக வேளாண்மை மூலம் விளைவிக்கப்பட்ட பொருட் களுக்கு மதிப்புக்கூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப் படுத்துதல் தொழில் நுட்பங்களை விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பான செயல்பட்ட மகளிர் சுய உதவி குழுவிற்கு பரிசுகளும், பயிற்சியில் கலந்து கொண்ட பெண் விவசாயிகளுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது. பயிற்சியின் இறுதியில் உதவி வேளாண்மை அலுவலர் பன்னீர் செல்வம் வேளாண்மைத்துறை இடுபொருட்கள் பற்றியும் பி.எம்.கிசான் திட்ட நிதியுதவி பெறும் வழிமுறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கணேஷ்குமார் நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சந்தனலட்சுமி மற்றும் ஜான்பாண்டியன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தன.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மதுரை கிழக்கு மற்றும் மேற்கு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்கள் இருப்பு

மதுரை, அக்.16

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு மற்றும் மதுரை மேற்கு வட்டாரங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் உயர் விளைச்சல் நெல் விதைகள், பாரம்பரிய நெல் விதைகள் பயறு விதைகள், சிறுதானிய விதைகள், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் மானிய விலையில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளதாக மதுரை மேற்கு வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவிக்கிறார்.

மதுரை கிழக்கு வட்டாரத்தில் வேளாண்மை விரிவாக்க மையம் தல்லாகுளம், யா.ஒத்தக்கடை மற்றும் கருப்பாயூரணி துணை வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், மதுரை மேற்கு வட்டாரத்தில் வேளாண்மை விரிவாக்க மையம் தல்லாகுளம், சிக்கந்தர்சாவடி மற்றும் சமயநல்லூர் ஆகிய துணை வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் சம்பா பருவத்திற்கு தேவையான தரமான உயர் விளைச்சல் நெல் விதை விநியோகத்திற்கான சிறப்பு திட்டத்தின் கீழ் ADT 54, CO 54, ASD 21, TKM 15, CO 55, ADT 56, ADT 57, TPS 5 ஆகிய நெல் ரகங்கள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் பாரம்பரிய நெல் இரகங்களான சிவன் சம்பா, மாப்பிள்ளை சம்பா நெல் ரகங்கள் 50 சதவீத மானிய விலையிலும், சிறுதானிய விதைகள் 50 சதவீத மானிய விலையிலும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மாற்றுப்பயிராக பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சான்று பெற்ற பயறு விதைகள் விநியோ கத்தின் கீழ் ரூ.30/- கிலோ வீதம் மானியமும், மாற்றுப்பயிராக பயறு சாகுபடி விவசாயிகளுக்கு உளுந்து விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பாரம்பரிய நெல் இரகங்களான தூய மல்லி மற்றும் மாப்பிள்ளை சம்பா நெல் இரகங்கள் ரூ.35/- கிலோ மானியத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மத்திய அரசு திட்டமான ஆத்மபாரத் திட்டத்தில் பயறு விதைகள் விநியோகத்தில் ரூ.60/- கிலோ மானியத்திலும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயறு விதை தொகுப்பு விநியோக இனத்தில் ரூ.508/- கிட் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் சிறுதானியங்கள் இயக்கம் (NFSNM) திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை இயக்கம், உயிர் உரங்கள் விநியோகம் 50% மானியம் அல்லது ரூ.150/- எக்டர் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான சூடோமோனாஸ், மெட்டாரைசியம், டிரைக்கோ டெர்மா விரிடி, விநியோக இனத்தில் ஒரு எக்டருக்கு ரூ.1400/- மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (நெல்), அசோஸ் பைரில்லம் (இதரம்), பாஸ்போபாக்டீரியா, பாஸ்பரஸ் சோலுபிலிஸ் பாக்டீரியா, துத்தநாக சல்பேட் பாக்டீரியா உயிர் உரங்கள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

நெல் பயிருக்கான சிறந்த விருது ஸ்ரீ.நாராயணசாமி நாயுடுவின் நெல் உற்பத்தி திறனுக்கான மாநில அளவிலான திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் விவசாயிகள் பங்கு பெறுவதற்கு இலக்கீடு பெறப்பட்டுள்ளது. இதற்கு பதிவு கட்டணமாக ரூ.150/- மட்டும் செலுத்தி தகுந்த ஆவணங்களுடன் கலந்து கொள்ளலாம்.

தெளிப்பு நீர் பாசன இனத்தில் 55 எக்டர் இலக்கு பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேளாண் இயந்திரமயமாக்கல் (SMAM) திட்டத்தின் கீழ் மானிய விலையில் பவர் டில்லர் விநியோக இனத்தில் ரூ.1.20 இலட்சம்/எண் மற்றும் ரோட்டவேட்டர் விநியோக இனத்தில் ரூ.60,000/- எண் மற்றும் நெல் நடவு இயந்திரம் விநியோக இனத்தில் குறைந்தது ரூ.1,50,000/- எண் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்ற தகவலை மதுரை மேற்கு வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பொன்னுசங்கம்பட்டியில் இயற்கை வேளாண்மைப் பயிற்சி : மூடாக்கு முறைகள் குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்




திருச்சி, அக்.16

திருச்சி மாவட்டம், துறையூரில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பயிற்சியில் மாணவிகள் ஹரிணி.மா, பராசக்தி.அ, பிரியதர்ஷினி.மு, பிரியதர்ஷினி.சே, ஸ்ரீவித்யா.நா, சுபர்ணா.பா, தஸ்லீமா நஸ்ரின்.ஹ, வைஷ்ணவி.ச, விவிதாஸ்ரீ.நா.ச மற்றும் யுவஸ்ரீ ச.ஞா ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாக திருச்சி மாவட்டம், பொன்னு சங்கம்பட்டியில் வேளாண்மைத் துறை சார்பில் அக். 13-ஆம் தேதி நடைபெற்ற இயற்கை வேளாண்மைப் பயிற்சியில், கலந்து கொண்ட மாணவிகள் விவசாயிகளுக்கு மூடாக்கு அமைத்தல் குறித்த செயல்விளக்கம் அளித்தனர்.

பயிர்களில் மூடாக்கு அமைப்பதன் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்களைச் செய்முறை மூலம் விளக்கினர். மூடாக்கு அமைப்பதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல், களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல், மண் வெப்பநிலையைச் சீராகப் பராமரித்தல் மற்றும் மண் வளத்தை மேம்படுத்துதல் போன்ற நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு நன்கு எடுத்துரைத்தனர். இச்செயல்விளக்கத்தின் மூலம் 30கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்தனர்.

துறையூர் வேளாண்மை உதவி இயக்குநர் வீரமணி தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில், விதைச் சான்றளிப்பு

துறை உதவி இயக்குநர் நளினி மற்றும் மத்தியத் திட்ட உதவி இயக்குநர் அறிவழகன் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்களப்பயிற்சியானது நாளந்தா வேளாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. வெங்கடபிரபு வழிகாட்டுதலிலும், பாட ஆசிரியர் ம.மோகன்ராஜ் மேற்பார்வையில், குழு ஒருங்கிணைப் பாளர்களான முனைவர் பொ.கனகராஜ் மற்றும் த.தமிழ்பாவை ஆகியோர் ஆலோசனையிலும் நடைபெற்று வருகிறது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# மகளிர் விவசாயிகள் தின விழா மற்றும் பயிர் பல்வகைப்படுத்துதல் பயிற்சித் திட்டம்



கன்னியாகுமரி, அக்.16

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டாரத்தில், மகளிர் விவசாயிகள் தின விழாவை முன்னிட்டு, ஆலடி விளை கிராமத்தில் ATMA திட்டத்தின் கீழ், பயிர் பல்வகைப் படுத்துதல் என்ற தலைப்பில் மாவட்டத்திற்குள் விவசாயிகள் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 40 முன்னோடி பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அகஸ்தீஸ்வரம் வேளாண்மை உதவி இயக்குநர் சுனில் தத், பயிர் பல்வகைப்படுத்துதலின் முக்கியத்துவம், அதன் மூலம் வேளாண்மையில் அதிக லாபம் பெறுதல், மண் வளத்தை மேம்படுத்துதல் மற்றும் மண்ணின் ஊட்டச்சத்து சமநிலையைப் பராமரித்தல் ஆகியவை குறித்து விளக்கினார்.

மேலும், பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்படவுள்ள வெற்றி வான் மகள் திட்டம் குறித்தும் எடுத்துரைத்தார். இத்திட்டத்தின் கீழ், 18 முதல் 65 வயது வரையிலான பெண் விவசாயிகளுக்கு ட்ரோன் இயக்குநர் பயிற்சி வழங்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார். கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (வீஹிபுஷீ மூலம் விரைவில் நடத்தப்படவுள்ள இப்பயிற்சியில் தகுதியுள்ள இளம் பெண் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், பயிற்சியை வெற்றிகரமாக முடித்து உரிய உரிமம் பெற்ற பின், வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீ கரிக்கப்பட்ட உற்பத்தியாளர்களிடமிருந்து ட்ரோன் வாங்கு வதற்கு, திட்ட வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு, அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை அரசு மானியம் பெறத் தகுதியுடையவர்கள் என்றும் விளக்கினார்.

டாக்டர் ஜோஷி, உதவி பேராசிரியர், வேளாண் அறிவியல் மையம் (KVK), திருப்பதிசாரம், இப்பகுதியின் வேளாண் காலநிலைக்கு ஏற்ற ஒருங்கிணைந்த பண்ணைய முறையின் பல்வேறு கூறுகள் மற்றும் பயிர் பல்வகைப்படுத்துதலுக்கான பொருத்தமான பயிர் சாகுபடி உத்திகள் குறித்து விளக்கினார்.

டாக்டர் ராஜ் பிரவீன், இணைப் பேராசிரியர், பழ ஆராய்ச்சி நிலையம் (FRS), தோவாளை, குறைந்த அளவு நீர் தேவைப்படும், அதிக மதிப்புள்ள பயிர்களை ஊடுபயிராகப் பயிரிட்டு கூடுதல் வருமானம் ஈட்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், பயிர் சுழற்சி முறை, கலப்புப் பயிர் சாகுபடி மற்றும் பல அடுக்குப் பயிர் சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், வருமானத்தைப் பல்வகைப்படுத்தவும், காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்புகளின் அபாயத்தைக் குறைக்கவும் முடியும் என்று எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் ரிஷா, வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விளக்கினார்.

இப்பயிற்சியுடன் இணைந்து PM-KISAN திட்டத்தின் செறிவூட்டல் விழிப்புணர்வு முகாமும் நடத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கம், தகுதி மற்றும் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இப்பயிற்சித் திட்டத்தின் மூலம் பெண் விவசாயிகளின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல், நிலையான மற்றும் லாபகரமான வேளாண்மை முறைகளை ஊக்குவித்தல், நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல் ஆகியவை முக்கிய நோக்கங்களாகக் கொண்டிருந்தன.



# மகளிர் விவசாயிகள் தின விழா சிறப்பாக நடைபெற்றது!

பெரம்பலூர், அக்.16

சர்வதேச மகளிர் விவசாயிகள் ஆண்டு 2026 மற்றும் அக்டோபர் 15-ஆம் தேதி மகளிர் விவசாயிகள் தினத்தை முன்னிட்டு, பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் சிறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குநர், ATMA துணை இயக்குநர், FTC அலுவலர்கள், வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர்கள், பெண் அலுவலர்கள் மற்றும் பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர்.



**நிகழ்வின் முக்கிய சிறப்பம்சங்கள்**

– **பெண் விவசாயிகளுக்கு அங்கீகாரம்** : வேளாண்மைத் துறையில் பெண்களின் பங்களிப்பு மற்றும் சாதனைகள் எடுத்துரைக்கப்பட்டன.

– **தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு** : பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் தொழில் முனைவோர் பலர் தங்களது வெற்றிப் பயணம், அனுபவங்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

– **பெண்களின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம்** : வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களில் பெண்களின் பங்கேற்பையும் சுயதொழில் முனைவுத் திறனையும் ஊக்குவிக்கும் வகையில் நிகழ்ச்சி அமைந்தது.

– **பெண் விவசாயிகளின் சாதனைகளுக்கு பாராட்டு** : விவசாயத்தில் பெண்களின் உழைப்பு, திறமை மற்றும் பங்களிப்பின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

– **பெரும் பங்கேற்பு** : 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

பெண் விவசாயிகள் மற்றும் பெண் தொழில் முனைவோரின் திறன்களை வெளிக்கொணரவும், அவர்களிடையே அனுபவப் பரிமாற்றத்தை ஏற்படுத்தவும் இந்நிகழ்ச்சி பயனுள்ளதாக அமைந்தது. விழா சிறப்பாக நடைபெற்றது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

கோயம்புத்தூர், அக்.16

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டாரத்தில் உள்ள பூசாரிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் (PACCS) விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி, இப்கோ மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ், தலைமையில் நடைபெற்றது. இதில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்ச்சியில், மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ், நானோ உரங்களின் சிறப்பம்சங்கள், உரச் செலவைக் குறைப்பதில் அவற்றின் பங்கு மற்றும் பயிர்கள் ஊட்டச் சத்துக்களைத் திறம்படப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, இப்கோ கள அலுவலர் சரவணன், காய்கறிப் பயிர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் இப்கோ நானோ யூரியா மற்றும் நானோ டி.ஏ.பி. உரங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்தும், தென்னை சாகுபடியில் சாகரிகா திரவ உரத்தைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்தும் விளக்கினார். மேலும், இப்கோ உரங்களைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் உள்ள காப்பீட்டுப் பயன்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




# வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான கிராமப்புற வேளாண் அனுபவ பயிற்சி தொடக்க விழா

புதுக்கோட்டை, அக்.16

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் புதுநகர் கிராமத்தில் புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான கிராமப்புற வேளாண் அனுபவ பயிற்சி தொடக்க விழா, ஜெயவேலன், வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் ஜெயவேலன், வேளாண்மை உதவி இயக்குநர் (பொ), பேசுகையில் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் தேசிய மகளிர் வேளாண் தினத்தை ஒட்டி வேளாண்மையில் பெண் விவசாயிகளின் பங்களிப்பு பற்றியும் மகளிருக்கான திட்டங்கள் குறித்தும் பேசினார்.

பிரியதர்ஷினி, வேளாண்மை அலுவலர், மண் பரிசோதனை நிலையம் குடுமியான்மலை, புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி உதவி பேராசிரியர் முகமது ஜாசிம், உதவி வேளாண்மை அலுவலர் ரெகுநாதன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உதவி வேளாண்மை அலுவலர் ரெகுநாதன், அனைவரையும் வரவேற்று பேசினார். பிரியதர்ஷினி, வேளாண்மை அலுவலர் மண் பரிசோதனை நிலையம், குடுமியான்மலை, பேசுகையில் மண் ஆய்வின் முக்கியத்து வத்தையும், மண் மாதிரி சேகரிக்கும் முறைகளையும், மண்வள மேலாண்மை மற்றும் சமச்சீர் உரமிடுதல் பற்றியும் எடுத்துக் கூறினார்.

புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி உதவி பேராசிரியர் முகமது ஜாசிம், பேசுகையில் பசுந்தாள் உரப் பயிர்களான

தக்கைப் பூண்டு, சணப்பு மற்றும் கொளுஞ்சி ஆகியவைகளின் பயன்பாடு குறித்தும் விலங்குகளால் ஏற்படும் பயிர் சேத மேலாண்மை பற்றியும் விளக்கினார். இந்நிகழ்வின் முடிவில் புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர் கோகுல் நன்றியுரை கூறினார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ரெகுநாதன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிர மணியன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

